செங்கோல்

நிறுவனர்: டாக்டர் ம.பொ.சிவஞானம்

மலர் : 42 இதழ் : 35 புரட்டாசி 11 27-9-92 ஞாயிறு சென்னை விலை 75 காசுகள்

முழு மதுவிலக்கும் அ தி மு க அரசும்

(ம. பொ. சி)

3

அ.தி.மு.க. அரசும் அதன் வரலாற்றுச் சிறப்புமிக்க முதல்வர் செல்வி டாக்டர் ஜெ.செயலலிதா அவர்களும் முழு மதுவிலக்கில் கொண்டுள்ள நம்பிக்கையை நாம் ஐயுறவில்லை.

ஆனால், மதுபானக் கடைகளில் பார்நடத்த முதல்வர் அனுமதித்தபோது, நாம் அதிர்ச்சி அடைந்தோம். முழு மதுவிலக்கை விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்போவதாக அ.தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் கூறியபோதும் சரி; தி.மு.க. அரசு அறிமுகப்படுத்திய மலிவு விலையில் மது விற்கும் திட்டத்தையும் சட்டத்தையும் அகற்றிய போதும்சரி; முழுமதுவிலக்குதான் அ.தி.மு.க.வின் கொள்கையென்று சொல்லப்பட்டபோதும் அது எளிதில் நிறைவேற்ற முடியாத உறுதிமொழி என்பதை நாம் அறிந்தேயிருந்தோம்.

1971 வரை நடைமுறையிலிருந்த முழு மதுவிலக்கை தி.மு.க. அரசு அகற்றியதனால், அதற்கு பின்னுள்ள 20 ஆண்டு காலத்தில் புதிய குடிகாரர்கள் தோன்றிவிட்டார்கள். மது வகைகளிலேயும் 'புதுப்புது சரக்குகள்' சந்தைக்கு வந்துவிட்டன.

போதைதரும் மாத்திரைகள் கூட சமுதாயத்தில்புகுத்தப்பட்டுவிட்டன. கள்ளச்சாராயம் சந்தையிலே எளிதில் கிடைக்கும் ஒரு விந்தையான சரக்காகிவிட்டது.

திரும்பவும் சொல்லுகிறோம், 1971வரை நடைமுறையிலிருந்த முழு மதுவிலக்கை தி.மு.க அரசு அகற்றியதனால், இனி எந்தக் காலத்திலும் முழு மதுவிலக்கு என்பது சாத்தியமில்லாத விஷயம் என்றாகிவிட்டது. திரும்பத் திரும்பச்சொல்லுகிறோம் 1971ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததால் விளைந்த கேடு இது. இதை எந்த கோயிலுக்கும் வந்து சத்தியம் செய்து சொல்ல தயாராக இருக்கிறோம்.

முழு அளவு மதுவிலக்கு அ.தி.மு.க. அரசால் சாத்தியமென்று நாம் நம்பவில்லை. ஆயினும், அது முயன்றால் மது அருந்தும் பழக்கமுடையோரின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். மதுபானக் கடைகளின் எண்ணிக்கையையும் சுருக்கமுடியும். போதைப் பழக்கத்தின் கொடிய விளைவுகளை மக்கள் உணரும்படிச் செய்தால் புதிய குடிகாரர்கள்தோன்றாமல் செய்துவிடவும் முடியும். இந்த அளவுக்குத்தான் மதுவிலக்கு சாதனைகளை அ.தி.மு.க அரசிடம்நாம் எதிர்பார்க்கிறோம். அந்த நம்பிக்கையும் பொய்த்துவிட்டது பார் கவுன்சிலை நடத்த அரசு அனுமதித்தால்.

முழு மதுவிலக்கு கோரும் காங்கிரஸ்காரர்களோ, காந்தியவாதிகளோ, தியாகிகள் சங்கமோ சிந்திக்க வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. முழு மதுவிலக்கானது சமுதாய சீர்திருத்தப் பிரச்னை. ஆ ; ஆளும் கட்சிக்கும் எதிர்கட்சிக்குமான பலாபலப்பிரச்னை அல்ல, தமிழகத்தில் அ.தி.மு.க ஆட்சி போய் நாளைக்கு காங்கிரஸ் ஆட்சியே வந்தாலும், உடனடியாக மது விலக்கு நடைமுறைக்கு வந்துவிடுமென்று நாம் நம்பவில்லை. ஏனெனில் இப்போது இந்திய மாநிலங்களிலே எங்கெல்லாம் காங்கிரஸ் ஆட்சி நடக்கின்றதோ அவற்றில் ஒரு மாநிலத்தில்கூட முழுமதுவிலக்கு நடைமுறையிலில்லை

அதிமுக அரசு கொள்கையளவிலேனும் முழு மதுவிலக்கை கொண்டு வருவதாக சொல்லிக் கொண்டுள்ளது அதைக்கூட சொல்லவில்லை மதுவிலக்கிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்ட காங்கிரஸ் மாநிலங்கள்

இதற்கான அடிப்படைக் காரணங்களை அனைத்திந்திய ரீதியில் பார்வை செலுத்தி நாட்டுப் பற்றோடும், சமுதாய சீர்திருத்த உணர்வோடும் ஆராய்ந்தறிய வேண்டும்.

சர்வோதய சங்கம், அரிசன சேவா சங்கம், தியாகிகள் சங்கம் ஆகியவற்றின் பெயரால் முழு மதுவிலக்கு கோரி தமிழகத்தில் 'மனித சங்கிலி'ப் பேரணி நடத்தப்படுகின்றது. இதை நாம் வரவேற்கலாம். ஆனால், இந்த அமைப்புகளெல்லாம் அனைத்திந்திய ரீதியில் இயங்கி வருபவையாகும். ஆகவே, எந்த எந்த மாநிலங்களில் முழு மதுவிலக்கு அகற்றப்பட்டுவிட்டதோ, அந்த அந்த மாநிலங்களிலெல்லாம் திரும்பவும்மதுவிலக்கைகொண்டு வரும்படி இந்த அனைத்திந்திய நிறுவனங்கள் போராடவேண்டும். ஆனால், தமிழகத்துக்கு வெளியே அப்படி எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை. தமிழகத்திலே ஆளும்கட்சியின்பால் உள்ள வெறுப்புணர்ச்சி கூட முழு மதுவிலக்குக் கோரிக்கையோடு கலந்திருப்பதைக் காண முடிகிறது.

முழு மதுவிலக்கை அரசே பொறுப்பேற்று நடைமுறைப் படுத்துவது வேறு. மக்களிடம் உள்ள குடிப் பழக்கத்தைப் பயன்படுத்தி அதற்கு உதவிபுரியும் வகைகளில் மதுக்கடைகள் நடத்த அனுமதித்து அதிலிருந்து பல நூறுகோடி ரூபாயை ஆண்டுதோறும் அரசு பெற்று வருகிறதே அதை விட்டுவிட்டால் போதும். தீண்டாமை ஒழிப்பு சமூக சீர்திருத்த இயக்கமாகி விட்டது போல், அதை தண்டனைக்குரிய கிரிமினல் குற்றமாக அரசமைப்பிலே அறிவித்து விட்டது போல, மது அருந்தும் பழக்கத்தையும் தண்டனைக்குரிய கிரிமினல்குற்றமாக அரசமைப்பின் வாயிலாக அறிவிக்க வேண்டும். இதையும் அனைத்திந்திய ரீதியில் நடைமுறைக்குக் கொண்டு வர வழிவகை செய்யவேண்டும். இதற்கு தமிழக முதல்வர் டாக்டர் செல்வி செயலலிதா அவர்கள் மாநில முதல்வர்கள் மாநாடு நடக்கும்போது அதன் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

செங்கோல்

ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்

27-9-92] ஞாயிறு [சென்னை

முதல்வரைப் பாராட்டுகிறோம்!

தமிழக சட்டப் பேரவை செப்டம்பர் 21ல் தொடங்கி யிருக்கிறது. அதன் முதலிரண்டு நாள் கூட்டத்தில் முதல்வர் நிகழ்த்தியிருக்கும் தன்னிலை விளக்க உரையானது தமிழ்நாட்டில் அராஜகம் வலுத்துவருவதைக் காட்டுகிறது.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர்கள் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரைகளில் ஆட்சேபகரமான பகுதிகளைத் தமது தன்னிலை விளக்க அறிக்கையில் முதல்வர் சான்றுகாட்டியுள்ளார். அவ்வறிக்கையின் இறுதியிலே அராஜகசக்திகளிடமிருந்து நாட்டைக்காக்க பொதுமக்களின் ஒத்துழைப்பும் தேவை என்று முதல்வர் கூறியுள்ளார். அவரது அறிக்கையின் பிரதான பகுதி வருமாறு:

''தேச விரோத சக்திகள்- போராளிகள் தமிழ்நாட்டில் செயல்பட முடிகிறது என்றால் அதற்குக் காரணம், அரசியல் கட்சித் தலைவர்கள். அரசியல் கட்சிகள் பகிரங்கமாக கொடுத்துவரும் ஆதரவு ஆக்கம் ஊக்கம்தான்

தேசவிரோத சக்திகள் மீது நடவடிக்கைகள் இன்னும் கடுமையாக இருக்கும் அதே சமயத்தில் இத்தகைய தீயசக்திகளை அடக்குவது அரசமட்டும் செய்யக்கூடிய காரியமல்ல, அப்படி எதிர்பார்ப்பதும் சரியல்ல. இதற்கு மக்களின் ஒத்துழைப்பும் நீதித்துறையின் ஒத்துழைப்பும் தேவை,

''பாட்டாளி மக்கள்கட்சியைச் சேர்ந்த சிலர் பல்வேறு பிரிவின் கீழ் கைதுசெய்யப்பட்டார்கள். 20பி-124ஏ பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை மெட்ரோ பாலிடன் மாஜிஸ்திரேட் ஜாமீனில் விடுதலை செய்ய அதிகாரம் கிடையாது. அவர்களை செஷன்ஸ் கோர்ட்டில்தான் ஜாமீனில் விடுதலைசெய்ய முடியும். ஆனால், நன்கு படித்துணர்ந்த நீதிபதி அவர்களை ஜாமீனில் விடுதலை செய்திருக்கிறார். தேசவிரோத சக்திகளை ஒடுக்குவது என்பது அரசு பொறுப்பு மட்டுமா? மக்களுக்கு அந்தப் பொறுப்பு இல்லையா? மற்றகட்சிகளுக்கு பொறுப்பு இல்லையா? நீதித்துறைக்கு பொறுப்பு இல்லையா? எல்லாவற்றிற்கும் அரசுதான் பொறுப்பு என்றால் அது எப்படி நியாயமாகும்? எல்லாத் தரப்பு மக்களும் அரசுக்கு முழு ஒத்துழைப்பு தர வேண்டும் அப்போதுதான் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு வெற்றிகிடைக்கும். அரசுக்கு பல்வேறு நிர்ப்பந்தங்கள் இருந்தாலும் சட்டம் ஒழுங்கை காப்பாற்றி வருகிறோம்.''

தமது அறிக்கையின் இறுதியிலே 'அராசகவாதிகளிடமிருந்து நாட்டைக் காக்க எனது அரசு தயங்காது. சட்டம்-ஒழுங்கை நிலைநாட்ட அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்' என்று முதல்வர் உறுதிதோய்ந்த குரலில் கூறியுள்ளார்.

அவரது உறுதி பாராட்டத்தக்கது. ஒருபெண்ணிடமிருந்து நாடு எதிர்பார்ப்பதைவிடவும் அதிக அளவில் முதல்வர் துணிவை வெளிப்படுத்தியுள்ளார்.

எல்டிடிஈயினரால் தமது உயிருக்கு ஆபத்துநேரக்கூடுமென்ற நிலையிலும் அதற்கு சிறிதும்அஞ்சாமல் முதல்வர் செயல்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால், தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் நிலை தேசபக்த தமிழர்களுக்கு வேதனை தருவதாக இருக்கிறது. கடந்த கால் நூற்றாண்டிலே இரண்டுமுறை ஆட்சிப்பொறுப்பிலிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் தனது பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்வதாகத் தெரியவில்லை.

பொதுவாக, திராவிட இயக்கத்தாரின் கடந்தகால அரசியல் வரலாறு எப்படி இருப்பினும்,பிரிவினையை அடியோடு கைவிட்ட பின்னர், நாட்டின் ஒருமைப்பாட்டைக்காப்பதிலே தமிழரசோடும் மத்திய அரசோடும் அது நம்பிக்கையூட்டும் வகையில் ஒத்துழைக்கவில்லை. கட்சிச் சுயநலமும் கட்சியிலுள்ள தனிநபர் சுயநலமுந்தான் தி.மு.க.வின் கொள்கையாகிவிட்ட சமுதாய சீர்திருத்தம்கூட அண்ணாகாலத்தோடு போய்விட்டது. தேசிய ஒருமைப்பாட்டுக்கும் தமிழகப் பிரிவினைக்கு மிடையில் தி.மு.க. ஊசலாட்டம் போடுகிறது.

தேர்தல் களத்திலே முதலில் காங்கிரசோடும் அதையடுத்து சனதாவுடனும் அதன்பின்னர் தேசிய முன்னணியோடும் கூட்டு சேர்ந்த பெருமை திமுகவுக்கு உண்டு. அப்படியிருந்தும் தேசிய ஒருமைப்பாட்டில் அதற்குள்ள நம்பிக்கை ஐயமற வெளிப்படவில்லை.

இந்த நாட்டிற்கு சுதந்திரம் தேடித்தந்த காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டிலே ஆரோக்கியமாகவும் தனது வரலாற்றுப் பெருமையைக் காத்துக்கொள்ளும் வகையிலும் செயல்படவில்லை யென்பதை மிகுந்த வேதனையோடு சொல்லவேண்டியிருக்கிறது.

ஆம்; தமிழ் நாட்டில்காங்கிரஸ்காரர்களிடையில் ஒற்றுமையில்லை. பிரிவினை சக்திகளுக்கு எதிராகக்கூட அவர்கள் ஒற்றுமையுடன் செயல்படவில்லை.

காங்கிரஸ்காரர்களிடையில்ஏற்பட்ட பிளவிலிருந்து ஆந்திரத்தைக் காப்பாற்ற இருதரப்பாரையும் சந்தித்துச் சமரசம் செய்து வைக்க பிரதமர் நரசிம்மராவ் தமிழரான திரு.ஜி.கே. மூப்பனாரை தனது தூதுவராக அனுப்பி வைத்திருக்கிறார். ஒரு தமிழருக்கு அத்தகைய தூதுவர் நிலை கிடைத்தது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

ஆனால், தமிழ்நாட்டின் நிலை என்ன? ஜி.கே.மூப்பனாரும் ஒரு கோஷ்டியின் தலைவராக இயங்குவதாக நாளிதழ்களில் நாள்தோறும் செய்திகள் வெளியாகின்றன திரு. ஜி.கே.மூப்பனார் திரு வாழப்பாடியாரைச் சந்தித்துப்பேசி தமிழ்நாட்டுக்காங்கிரஸ்காரர்களிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தலாமே!

தமிழ்நாட்டிலே இன்னமும் வலுவாக இருக்கும் ஒரேஅனைத்திந்திய கட்சி காங்கிரஸ்தான். திமுகவும் அதிமுகவும் மாநில கட்சிதான் என்பதையும் மற்றுள்ள இடதுசாரி கட்சிகள் பெயரளவில்தான் தேசிய கட்சிகள் என்பதும் நாடறிந்ததாகும். இதனால்தான் நேற்று முளைத்த பாட்டாளி மக்கள் கட்சி அராசகத்தால்ஏற்கனவே உள்ள திமுக அதிமுக ஆகிய மாகாணக் கட்சிகளோடு மற்றொரு மாகாணக் கட்சியாக பாட்டாளி மக்கள் கட்சியை டாக்டர் ராமதாஸ் உருவாக்கப்பார்க்கிறார். இதை அனுமதிப்பது நாட்டுக்கு நல்லதல்ல. பஞ்சாபிலும் காஷ்மீரிலும் இன்றுநேர்ந்துள்ள அராசகத்திற்குக் காரணம் அங்கெல்லாம் காங்கிரஸ்காரர்களிடையில் ஏற்பட்ட பூசல்தான்.

தமிழ்நாடு காப்பாற்றப்படவேண்டுமானால், முதலில் காங்கிரஸ்காரர்கள் ஒன்றுபடவேண்டும். இன்றைய அவசர கடமை அதிமுக அரசை பயன்படுத்தி பிரிவினை சக்திகளை வெல்லுவதாகும். காங்கிரஸ் தனித்துநின்று அந்த தீயசக்திகளை வெல்வது சாத்தியமில்லை. அதிமுக தலைவரும் முதல்வருமான செல்வி டாக்டர் செயலதா காங்கிரசுடனும் ஒத்துழைத்துவருவது நம்பிக்கையைத் தருகிறது அவரைப் படுத்து ஈழத்திலிருந்து இறக்குமதியாகியுள்ள பயங்கரவாதிகளையும் அவர்களைப் போஷிக்கும் செவிலித்தாயாகப் பார்க்கும் பாட்டாளி மக்கள் கட்சியையும் வெல்லுவதுதான் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் காரஸ்காரர்களின் தலையாய கடமையாகும்.

சட்டமன்றத்தில் வெளியிட்ட தன்னிலை விளக்க அறிக்கையிலே பிரிவினை சக்திகளை— பயங்கரவாதிகளை ஒடுக்குவதிலே முதல்வர் காட்டியுள்ள உறுதியைப் பாராட்டுகிறோம்!

பயங்கர வாதமும் காந்தி சகாப்தமும்

(ம. பொ. சிவஞானம்)

[19]

1920ஆம் ஆண்டு டிசம்பரில் நாகபுரியில் 35வது வருடாந்திர காங்கிரஸ் மகாசபை கூடுவதற்கு முன்பாக, அதே ஆண்டு செப்டம்பரில் கல்கத்தா நகரில் விசேஷ காங்கிரஸ் மகாசபை ஒன்று காந்திஜியின் விருப்பப்படி கூட்டப்பெற்றது. தொடர்ந்து மூன்றுநாட்கள் நடைபெற்ற இந்த காங்கிரஸ் கூட்டத்திலே காந்தியடிகள் அறிவித்திருந்த ஒத்துழையாமைக் கொள்கையே பிரதானமாக விவாதிக்கப்பட்டு, தீர்மான வடிவில் ஏற்கபெற்றது.

கல்கத்தா விசேஷ மகாசபை கூடுவதற்கு முன்பு அப்போதைய மாகாண காங்கிரஸ் கமிட்டிகளின் அபிப்பிராயத்தைக் கோரி ஒத்துழையாமைக் கொள்கையும், வேலைத் திட்டமும் அனுப்பி வைக்கப்பட்டன. அப்போது ஆந்திரம் தனி மாகாண காங்கிரஸ் ஆக்கப்பெற்றிருந்ததால், தமிழகம் உள்ளிட்ட எஞ்சிய சென்னை ராஜ்ஜியத்தில் தனி மாகாண காங்கிரஸ் கமிட்டி இயங்கியது, அதிலே, தமிழ்நாட்டவரே மிகுதியாக செல்வாக்கு பெற்றிருந்தனர்.

மாகாணக் கமிட்டிகள் காந்தியடிகளின் ஒத்துழையாமை பற்றி வெளியிட்ட கருத்துக்கள் குறித்து டாக்டர் பட்டாபி சீதாராமையா 'காங்கிரஸ் மகாசபை வரலாறு' என்னும் தமது நூலில் கூறுவது வருமாறு:

''ஒத்துழையாமைக் கொள்கைபற்றிப்பல மாகாண காங்கிரஸ் கமிட்டிகளும் அபிப்பிராயத்தை அறிவித்தன, கல்கத்தாவில் கூடும் விசேஷ காங்கிரஸ் ஒத்துழையாமை லட்சியத்தை ஏற்கவேண்டுமென்று ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டியும், பஞ்சாப் மகாண காங்கிரஸ் கமிட்டியும் சிபாரிசு செய்தன. அப்போது இருந்த நிலையில் ஒத்துழையாமை தவிர வேறுவழியில்லை என வங்காளம் அபிப்பிராயப்பட்டது. ஆனால், வங்கக் கமிட்டியும் மத்திய மாகாணக் கமிட்டியும், மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி அமையவிருக்கும் சட்டசபைகள் பகிஷ்காரத்தை ஆதரிக்கவில்லை. அதனால், சட்டசபைக்குள் ஏராளமான காங்கிரஸ்வாதிகள் புகுந்து அங்கு ஒத்துழையாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறின.

''பீகாரும் பம்பாயும் முழுமனதுடன் ஒத்துழையாமைக்கு ஆதரவு தந்தன. பர்மா மாகாணக் கமிட்டி ஒத்துழையாமைத்திட்டத்தை ஆதரித்ததாயினும், அது அந்த மாகாணத்தில் சாத்தியமில்லை என்று கூறியது.

''சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டிஒத்துழையாமையை வரவேற்று ஆதரவு அளித்ததாயினும் காந்தியடிகளின் வேலைத்திட்டத்திற்கு எதிராக வாக்களித்தது.

''சிந்து மாகாணம் முழுமனதுடன் ஆதரவு காட்டி நான்கு வகையில் ஒரு திட்டமும் போட்டது ஆனால், இராணுவத் துறையில்ஒத்துழையாமையைக்கடைப்பிடிப்பதை அது ஆட்சேபித்தது ஐக்கிய மாகாணம் (தற்போதைய உத்திரப்பிரதேசம்) ஒத்துழையாமையை ஆதரித்ததுடன் விரிவாக வேலைத் திட்டமும் வகுத்தது''

கல்கத்தா விசேஷ காங்கிரசின் விஷயாலோசனைக் கமிட்டியில் காந்திஜியின் ஒத்துழையாமைத் தீர்மானம் ஏழு அதிகப் படியான வாக்குகளால் ஏற்கப்பட்டது. ஆனால், கல்கத்தா விசேஷ காங்கிரஸ் மகாசபையிலே அதன்மீது வாக்கெடுத்தபோது, இரண்டு அதிகப்படியான வாக்குகளால்தான் அது வெற்றிபெற்றது.

கல்கத்தா விசேஷ காங்கிரசில் ஒத்துழையாக் கொள்கைமீதான வேலைத் திட்டங்களை வகுக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது. அக்குழு தெரிவித்த ஏழு வகையான வேலைத் திட்டம் வருமாறு:

1 அரசிடமிருந்து பெற்றுள்ள பட்டங்களைத் துறத்தல்; அரசிடமிருந்து பெற்றகௌரவ பதவிகளில் இருந்து விலகிக் கொள்ளுதல்; உள்ளாட்சிகளுக்கு நியமிக்கப்பட்டு அங்கம் வகிப்போர் அவற்றிலிருந்து விலகிக் கொள்ளுதல்.

2 அரசால் நடத்தப்படும் விருந்துகள், கச்சேரிகள், தர்பார்கள், அரசாங்க அதிகாரிகள் முழு உத்தியோகமுறையிலோ அல்லதுபாதி உத்தியோக முறையிலோ நடத்தும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் பங்குகொள்ள மறுத்துவிடுதல்.

3. அரசுக்குச் சொந்தமானவையும் அரசிடமிருந்து பொருளுதவி பெறுபவையும் அரசின் அதிகாரத்திற்குட்பட்டவையுமான பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் குழந்தைகளை அனுப்புவதை கொஞ்சங்கொஞ்சமாக நிறுத்திக்கொண்டு, அந்தந்த மாகாணத்தில் அவரவர்களின் கல்வி போதனைக்காக தேசிய முறையிலான பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் ஏற்படுத்திக் கொள்ளுதல்.

4. வக்கீல்களும் வழக்காளிகளும் நாளாவட்டத்தில் அரசாங்க கோர்ட்டுகளைப் பகிஷ்கரித்து வழக்குகளை விசாரிப்பதற்கென ஆங்காங்கே பஞ்சாயத்து கோர்ட்டுகள் ஏற்படுத்திக் கொள்ளுதல்;

5 இராணுவத்திலுள்ளவர்களும், குமாஸ்தாவாக வேலை பார்ப்பவர்களும் மெசொப்படோமியாவில் அரசினருக்கு ஊழியம் புரிவதற்காக ஆட்கள் திரட்டப்படுங்கால் அதில் சேர மறுத்துவிடுதல்;

6. சீர்திருத்தப்பட்ட சட்டமன்றங்களுக்கு வேட்பாளராக நிற்பதிலிருந்து விலகிக்கொள்ளுதல்;

7 காங்கிரஸ் கட்டளைகளையும் மதிக்காமல் யாராவது தேர்தலில் வேட்பாளராக நின்றால் வாக்காளர்கள் அவருக்கு தங்களுடைய வாக்குகளை கொடுக்க மறுத்துவிடுதல்;

(4ம் பக்கம் பார்க்க)

பயங்கர வாதமும் காந்தி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தியடிகள் முதலில் உள்ளாட்சி நிறுவனங்களையும் பகிஷ்கரிக்க வேண்டுமென விரும்பினார். எனினும் நண்பர்கள் விருப்பத்தின்படி பின்னர் இதை வற்புறுத்தாமல் விட்டுவிட்டார்.

காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போருக்கு பொதுமக்களிடையேயும் காங்கிரஸ் ஊழியர்களிடையேயும் பேராதரவு நாளொரு மேனியாக பெருகிவந்தது ஆயினும், அகில இந்தியப் புகழ்பெற்று தேசியத் தலைவர்களில் சிலர் அடிகளாரின் ஒத்துழையாமையை அடியோடு எதிர்த்தும் அரைகுறையாக ஆதரித்தும் அறிக்கை வெளியிட்டு வந்தார்கள்.

காந்தியடிகள் இந்த நிலைகண்டு கலங்கவில்லை கல்கத்தா விசேஷ காங்கிரஸ் மகாசபைக்கு முன்னர் கூடிய விஷயாலோசனைக் கமிட்டியிலே ஏழு அதிகப்படியான வாக்குகளாலும், மகாசபையிலே இரண்டு அதிகப்படியான வாக்குகளாலுந்தான் ஒத்துழையாமைத் தீர்மானம் ஏற்கப்பட்டது. ஆயினும், காந்தியடிகள் மிகுந்த நம்பிக்கையோடு நாகபுரிக்குப் பயணமானார்.

காங்கிரசிலே நிலைமை இவ்வாறிருக்க, பிரிட்டிஷ் அரசாங்கமும் அடிகளாரின் ஒத்துழையாமைப் போருக்கு எதிராக பிரச்சாரப்போர் நடத்திவந்தது. பிரிட்டனில் அதுவரை காங்கிரசுக்கு பேராதரவு காட்டிவந்த தொழில் கட்சியினரும் அடிகளாரின் ஒத்துழையாமையை நாகபுரி காங்கிரஸ் ஏற்குமானால், அந்த மகாசபைக்கு பிரிட்டனில் ஆதரவாளர்கள் இருக்கமாட்டார்கள் என்று பயமுறுத்தி அறிக்கைகள் வெளியிட்டு வந்தனர்.

நாகபுரி காங்கிரசுக்கு பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் சார்பில் பார்வையாளர்கள் வந்து கலந்து கொண்டனர். அவர்களில் ஒருவர் மகாசபை மேடையிலும் பேச அனுமதிக்கப்பட்டார்.

நிலைமை இவ்வாறிருப்பினும், காந்தியடிகள் இருவேறு முனைகளில் மகத்தான வெற்றி பெற்றுவிட்டார் என்று சொல்லவேண்டும்.

நாகபுரி மகாசபை கூடுவதற்கு முன்பே காங்கிரசிலிருந்த மிதவாதத் தலைவர்கள் ஒருவர்பின் ஒருவராக வெளியேறி பிரிட்டிஷ் ஆட்சியுடன் ஒத்துழைப்போராக மாறிவிட்டனர். மிதவாதத்துக்கும் தீவிர வாதத்துக்கும் இடையே ஊசலாட்டம் போட்டுவந்த சுயாட்சிச் சங்கத்தை காந்தியடிகள் தன்வசம் எடுத்துக் கொண்டதோடு, அதன்பெயரை 'சுயராஜ்ய சபை' என்று மாற்றிவிட்டார். அந்தச் சபையும் காலப்போக்கில் காங்கிரசிலே ஐக்கியமாகி விட்டது தேசபக்த வெறியும் தியாக ஆவேசமும் கொண்ட பயங்கரவாதிகளோ இருக்குமிடம் தெரியாமல் ஆகிவிட்டனர்.

ரௌலட் சட்டம் எதற்காக தோற்றுவிக்கப்பட்டதோ அதற்கு அவசியமில்லாமல் போய்விட்டது. பயங்கரவாதிகளான தேசபக்தர்களில் மிகப்பெரும்பாலோர் நாகபுரியில் காங்கிரஸ் மகாசபை கூடுவதற்கு முன்பே காங்கிரசில்கலந்து விட்டனர். ஆனால், கம்யூனிசச் சார்புடைய பயங்கரவாதிகள் புதிதாகத் தோன்றி, அந்தரங்கத்தில் வேலை செய்துவந்தனர். இவர்களை ஊக்குவித்தது, 1917ல் ருஷ்யாவில் ஜார் ஆட்சி வீழ்ச்சியுற்று சோவியத் யூனியன் தோன்றியதாகும். இந்த இடதுசாரி பயங்கரவாதிகள் ''இந்துஸ்தான் சோசலிசக் குடியரசு சேனை'' என்றுபெயர் வைத்துக் கொண்டனர். இவர்களுக்கு முன்னர் இயங்கிய பயங்கரவாதிகள் அனைவருமே இந்துமதச் சார்புடையவர்களாவர். இதுபற்றி உரிய இடத்தில் விரிவாகக் கூறுவோம்.

(தொடரும்)

நமது பாதையிலே....

ம-பொ-சி சுற்றுலா

மகாஹோமம்

செப்டம்பர் 11ஆம் தேதியன்று காலை 10மணிக்கு சென்னையை யடுத்துள்ள மடிப்பாக்கம்கிராமத்தில் நடைபெற்ற மகாகணபதி ஸ்ரீதுர்கா ஹோம நிகழ்ச்சியில ம. பொ. சி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

வாணியர் மாநாடு

செப்டம்பர் 13ஆம் தேதியன்று முற்பகல் தேனாம்பேட்டை காமராசர் நினைவாலயத்தில் நடைபெற்ற தென்னிந்திய வாணியர் பத்தாவது மாநாட்டில் கலந்து கொண்டு ம. பொ. சி. சிறப்புரையாற்றினார்.

இந்தி மொழித்தினம்

செப்டம்பர் திங்களன்று முற்பகலில் தியாகராய நகர் தக்சிண பாரத இந்தி பிரசார சபையில் அந்த சபையின் முன்னாள் செயலாளர் திரு. சத்தி நாராயணாவின் சேவைக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் ம. பொ. சி. கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

செல்வதியார் நூற்றாண்டு விழா

செப்டம்பர் 15ஆம் தேதியன்று மாலை சென்னை பெரம்பூர் ரெயில்வே தொழிலாளர் சங்க ஒற்றுமை நிலையத்தில் திரு டி. வி. ஆனந்தம் தலைமையில் நடைபெற்ற சென்னை தொழிலாளர் சங்க நிறுவனர்களிலொருவரான திரு ஜி. செல்வபதி செட்டியாரின் நூற்றாண்டு விழாவில் டாக்டர் ம. பொ. சி. கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

○

மதிப்புரை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நூலில் தரப்பட்டுள்ள தலைப்புகளும் துணைத் தலைப்புகளும் சுவைபட அமைந்துள்ளன.

முன்னாள் கல்வியமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள் தந்துள்ள அணிந்துரையில் ''தமிழில் இத்தகைய நூல்கள் பரவலாகப் பெருகிவரவேண்டும்'' என்றுகுறிப்பிருக்கிறார். அதையே நானும் கூறி ஆசிரியரை வாழ்த்துகின்றேன். நூல் கவிதைகளைப் படிப்பதிலே காட்டும் ஆர்வத்தைப்போல இதுபோன்ற தமிழியல் நூல்களைப் படிப்பதிலேயும் காட்டுவோர்களானால் ஒவ்வொரு தமிழனிடமும் இந்நூல் இருக்குமென்பது என் நம்பிக்கை

'ஆட்சித் தமிழ்' நூல் வந்த பின்னர் தமிழ் ஆட்சிக்கு அணையுற்றதானே!

—ம. பொ. சி.

⁂

மதிப்புரை

ஆட்சித் தமிழ்

ஆசிரியர்: டாக்டர் த. பெரியாண்டவன் வெளியீட்டோர்: வளர்தமிழ்ப் பதிப்பகம்;40 அஞ்சுகம் நகர், சென்னை—600065 பக்கம் 320; விலை ரூ 75.

இந்நூல், டாக்டர் பட்டத்திற்கான ஆய்வாக எழுதப்பட்டதாகும். இந்நூலாசிரியர், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பிலிருந்த வண்ணம் இந்நூலை எழுதி வெளியிட்டுள்ளாராதலால், பிற ஆய்வாளர்களைவிடவும் தாம் வகிக்கும் பொறுப்பையொட்டி ஆற்றவேண்டிய கடமையாகக் கருதியும் இந்நூலை அரும்பாடுபட்டுத் தயாரித்து வெளியிட்டுள்ளார்.

தமிழகம் அரசியலில் அன்னியரிடமிருந்து விடுவிக்கப் பெற்றுவிட்டதென்றாலும். இன்னமும் ஆட்சியிலே தமிழ்மொழி முழுமூச்சாக உரிமை பெறவில்லை. இதற்கான காரணங்களை ஆசிரியர் ஆங்காங்கே எடுத்துக் காட்டி எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் என்று முழக்கமிடும் என்போன்றார்க்குத் துணைபுரியும் வகையில் இந்நூலைப் படைத்துள்ளார்.

ஆங்கில மொழியினரான ஆங்கிலேயர் இந்நாட்டை ஆண்டது 200 ஆண்டுகால அளவில்தான். அதற்கு முன்னரும் தெலுங்கு மொழியினரான நாயக்க மன்னர்களும், உருது மொழியினரான நவாபுகளும், மராத்தி மொழியினரும், சமஸ்கிருத பற்றுடைய பல்லவரும் களப்பிரரும் தமிழகத்தில் ஆட்சி செலுத்தினர் இதனை உணர்த்தும் வகையில்தான் ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்தபின்னர் வாராது போலவந்த மாமணி என தமிழ்நாட்டினர் பெற்ற விடுதலை உணர்வை பாரதியார் குறிப்பிடுகிறார். இதனை இந்நூலாசிரியரும் அறிவாராயினும், டாக்டர் பட்டத்திற்கு பல்கலைக் கழக விதிமுறைகளுக்குட்பட்டு, வழிகாட்டி தந்த கெடுபிடிகளுக்குக் கட்டுப்பட்டு எழுதிய நூலாதலால் அரசியல் பிரசாரத்தில் ஈடுபட முடியாதல்லவா!

ஆய்வாளர் தம் நூலுக்கு வைத்துள்ள பெயருக்கேற்ப ஆங்கிலத்திடம் இழந்துவிட்ட ஆட்சிஅலுவலகங்களில்தமிழை அரியணையிலேற்றுவதிலே மிகுதியாகக் கருத்துச் செலுத்தி அத்துறையில் தமிழ்மொழிக்குதற்போதுள்ள அவலத்தை எடுத்துக்காட்டி அதிலிருந்து மீண்டும் துறைதோறும் தமிழ்மொழி துரைத்தனம் செலுத்த வழிவகைகளைக் கூறுகிறார்

ஆசிரியர் விஞ்ஞான வழிப்பட்ட பொருளை எடுத்துக் கொண்டு ஆய்வதுபோல மொழிபற்றிய பொருளையும் ஆய்ந்து எழுதியுள்ளார்.

ஆங்கிலம் தமிழகத்தில் ஆதிக்கம்பெற்றகாலம் நாயக்கர்கள்—நவாபுகள்—பல்லவர்—களப்பிரர் காலத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். ஆம்; ஆங்கிலேயர் ஆதிக்கம் பெற்றது விஞ்ஞான சகாப்தத்தில்! மற்று அச்சு யந்திரம் நடைமுறைக்கு வந்த காலத்தில் இன்னும் பள்ளிகளும் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும்பெருகி, மாணவர்கள் வகுப்பறைகளில் அமர்ந்து படித்து ஆண்டுதோறும் தேர்வு எழுதி, அதிலே பெறும்மதிப்பெண்களைக் கொண்டு பட்டங்களும் பதவிகளும் பெற்றகாலம்! அதனால், பல்லவர்-களப்பிரர் காலத்தில் வடமொழியும் நவாபுகள் காலத்தில் உருதுமொழியும் நாயக்க மன்னர்கள் காலத்தில் தெலுங்கும் பெற்றதை விடவும் அதிக அளவில் ஆங்கிலம் தமிழர்மீது ஆதிக்கம் பெற்றுவிட்டது. இவற்றை விவரித்தெழுதினால் அது பிரசாரமென்று பல்கலையார் கருதக்கூடும்.

இந்நூலாசிரியர், தாம்வகிக்கும்பொறுப்பைப்பயன்படுத்தி எடுத்துக்கொண்ட ஆய்வுக்கான தகவல்களை—செய்திகளாக மட்டுமல்லாமல் புள்ளிவிவரங்களாகவும்— திரட்டித் தந்துள்ளார்.

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாறுங்கால் தமிழின் தனித்தன்மை கெடக் கூடுமென்பதையும் ஆய்வு ரீதியில் எடுத்துக்காட்டி, எச்சரித்துள்ளார். ஆங்கிலேயர் தங்கள் தாய்மொழியின் வளர்ச்சிக்குக் கடைப்பிடித்த வழிமுறைகளை தமிழரும் தமிழை வளர்க்க அப்படியே பயன்படுத்தத் தேவையில்லையென்பதைத் தக்கசான்றுகளுடன் எடுத்துக்காட்டியுள்ளார். தமிழின் தனித்தன்மை கெடாமலே அம்மொழியை ஆட்சிமொழியாக்கி முடிப்பதில் தமிழர் வெற்றிபெற முடியுமென்பதை மிகுந்த நம்பிக்கையோடுவலியுறுத்திச்செல்கிறார்.

இந்நூலுக்கு அணிந்துரைஅளித்துள்ள மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்,

> ''இது ஆராய்ச்சி நூலாக மட்டுமல்லாமல், தமிழை பரவலாகவும் விரிவாகவும், ஆழமாகவும் அழுத்தந்திருத்தமாகவும் நடைமுறைப்படுத்த வேலையாகக் கொண்டுள்ளோர் அனைவருக்கும் வழிகாட்டும் நூலாகவும் அமைந்திருக்கிறது''

என்று கூறியிருப்பது 'பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்னும்பழமொழி போன்றதாகும்.

தமிழை வளர்க்கவும் வாழ்விக்கவுமான பொறுப்பு முன்னொரு காலத்தில் தமிழ்ப்புலவர்களிடந்தானிருந்தது. அந்நாளில் நூல் என்பது எழுதியவர்களிடம் மட்டுமே உள்ள ஓலைச்சுவடியாகத்தானிருந்தது. அச்சு யந்திரம் தோன்றிய பின்னர் தமிழில் எழுதவும் படிக்கவும் மட்டுமே தெரிந்துவைத்துள்ளவர்களிடமும் தமிழ்நூல்கள் போய்ச் சேர்கின்றன.

நாளிதழ்களும் வார—திங்கள் வெளியீடுகளும் நடத்துவோரும் தமிழைப் பரப்புகின்றனர். அரசியல் மேடைகள் பெருகியதனால் ஆட்சித் தமிழ் என்பது போல மேடைத் தமிழ் என்ற புதுத்தமிழும் தோன்றிவிட்டது. புதுக்கவிதை கூடத் தோன்றிவிட்டதல்லவா!

நாளிதழ்களை நடத்துவோர் தனித் தமிழ்ப் புலவர்களை அணுகமுடியாது. மணிக்கு மணி கிடைத்துவரும் தந்திச் செய்திகளை தமிழில் பெயர்த்துத்தர தமிழ்ப்புலவரும் பயன் படமாட்டார்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பாமரர்களிடம் ஏற்பட்டுவரும் அரசியல்-கலை ஆர்வமானது,புலவர்களுக்கும் அவர்களுக்குமிடையில் இடைவெளியை அதிகப்படுத்திவிட்டது. இது, அந்திமாலை நேரம்! ஆகவே, தனித் தமிழ்—வடமொழி கலப்புத் தமிழ்—ஆங்கில கலப்புத் தமிழ் என்ற வாதத்திலீடுபட்டு ஆக்கவழியிலிருந்து விலகிவிடக் கூடாது

இந்நூலாசிரியர் நல்ல தமிழில் எடுத்துக்கொண்ட பொருளை விளக்கிச் சொல்கிறார். அழகிய தமிழ்நடை ஆழமான பொருள் கொண்டநடை படிக்கப் படிக்க சுவைதரும் நூல்!

நூலின் பெயர் தமிழில் ஆட்சி என்றிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்,தேவைப்படுமிடங்களில் ஆங்கிலச் சொற்களை தந்து அவற்றிற்கு இணையான தமிழ்ச்சொற்களை எடுத்துக் காட்டியுள்ளார் ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு பல தமிழ்ச்சொற்கள் உண்டென்பதையும் உணர்த்திருக்கிறார். ஆனால், எழுத்துக்கள் மிகாமலிருப்பது நலம் என்றும் எச்சரித்துள்ளார்.

இந்நூலாசிரியரை நான் நன்கறிவேன். தமிழ்வளர்ச்சி தனிநபர் குழுவின் தலைவனாக இரண்டாண்டுகள் பொறுப்பு வகித்தபோது தமிழ் ஆட்சிமொழிக் கருத்தரங்குகளில் கலந்துரையாட வாய்ப்புப் பெற்றபோது நல்ல தமிழ்ப் பண்புடன் வாழ்பவரென்பதையும் உணர்ந்து அவர்பால் உள்ளத்தால் உறவுகொண்டேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

மகாதேவ மாலை

''வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி மூத்தாந் தத்தின்
நடுவாகி நவசிலைக்கு நண்ணா தாகி
முதாண்ட கோடியெல்லாம் தாங்கிநின்ற
முதலாகி மனாதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்றும்
மவுனவியோ மத்தினிடை வயங்குந் தேவே''

''தோன்றுதுவி தாத்துவித மாய்விசிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
[illegible]த் துவிதமாய்ச் சுத்தந் தோய்ந்த
சமரசாத் துவிதமுமாய்த் தன்னை யன்றி
ஊன்றுநிலை வேறொன்று மிலதாய் என்றும்
உள்ளதாய் நிரதிசய உணர்வாய் எல்லாம்
ஈன்றருளுந் தாயாகித் தந்தையு மாகி
எழிற்குருவாய்த் தெய்வதமாய் இலங்குந் தேவே''

—திருஅருட்பிரகாச வள்ளலார்

விளம்பர உதவி

ஏ பி டி பார்சல் சர்வீஸ்

பொருள் போக்குவரத்து சம்பந்தமான
அனைத்து பிரச்னைகளுக்கும் சுலபமான தீர்வு

ஏ பி டி பார்சல் சர்வீஸ்

இருபத்தைந்து ஆண்டுகளாக வணிகப்
பெருமக்களின் நம்பிக்கைக்குரிய தேர்வு

ஏ பி டி பார்சல் சர்வீஸ்

உங்களுக்கு ஏற்றதொரு பார்சல் சர்வீஸ்

ஏ பி டி பார்சல் சர்வீஸ்

எங்களது சேவையை உங்களுக்கும் தொடர
எங்களுக்கு ஓர் வாய்ப்புத் தாரீர்!
குறைந்த கட்டணம்.. விரைந்த சேவை

ஏ பி டி பார்சல் சர்வீஸ்
10/13-15 காளியங்கராயன் தெரு
ராம் நகர், கோவை - 641 009.

பாட்டாளிகள் மாநாடு

[ம. பொ. சிவஞானம்]

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனரான டாக்டர் ராமதாசும் அதன் சார்பில் சட்டப் பேரவையில் ஒரே உறுப்பினராக இடம்பெற்றிருக்கும் முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் எனப்படும் ப நெடுமாறன் உள்ளிட்ட வேறு சிலரும் தமிழக அரசால் கைது செய்யப்பட்டுள்ளனர்.முதல் இருவரும் வேறு இருவருமாக நான்கு பேர் ஜாமீனில சிறையிலிருந்து விடுதலை பெற்றுள்ளனர். இவர்கள் மீது கிரிமினல் சட்டப்படி நீதிமன்றத்தில் வழக்கு பதிவாகியுள்ளது.

சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய தமிழர் வாழ்வுரிமை மாநாடானது ஈழத்துப் புலிகளின் வன்முறையை வெளிப்படையாக ஆதரிக்கும் நோக்கில் நடைபெற்று முடிந்தது. இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள எல்.டி.டி.ஈ. இயக்கத் தலைவர் திரு.பிரபாகரன் உருவப்படம் பாட்டாளி மக்கள் கட்சி ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்டது. அவரது உருவத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பேட்ஜுகளை ஊர்வலத்தினரில் சிலர் தங்கள் மார்புகளில் அணிந்து சென்றனர்.

திரு.பிரபாகரன் தமிழினத்தின் ஒரே வீரன் என்றும் ஊர்வலத்தினரால் கோஷிக்கப்பட்டதாம். 'ஈழமும் இந்தியத் தமிழகமும் இணைந்தசுதந்திரத் தமிழகம் நாளை அமையப் போவதுறுதி' என்றும் ஊர்வலத்தில் கோஷம் எழுப்பப்பட்டதோடு, மேடையிலும் சிலரால் பேசப்பட்டதாம். திரு பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள், 'சுதந்திர ஈழம் பிரசவமாகப் போவது உறுதி' என்று கூறி, அந்தப் பிரசவத்திற்கும் பணிபுரியும் தாதியாக இந்தியா இருக்கவேண்டும் என்று மாநாட்டில் பேசியதாக ஒன்றிரண்டு நாளிதழில் வெளியானது.

பொதுவாக மேலே சொல்லப்பட்ட புலிப்படையினருக்கு ஆதரவான கோஷங்களை, கொள்கைகளை வரிக்கு வரி சொல்லுக்குச் சொல் உண்மையென்று நாம் சாதிப்பதற்கு இல்லை. ஆயினும் மாநாட்டின் தலைவர்கள் ஈழத் தமிழகத்தின் புலிப்படைக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் தேசத்துரோகிகள் ஊர்வலத்தில் முன்னணியில் செல்லவும் மாநாட்டில் உரையாற்றவும் அனுமதித்தது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும்.

எல்.டி.டி.ஈ இயக்கம் தடை செய்யப்பட்டிருக்கும் ஒன்று என்பது பாட்டாளி மக்கள் கட்சி அறியாததல்ல. மேடை கிடைத்த இடங்களில்ஏறிக்கொண்டுஈழத்து புலிப்படையினரின் கொலைச் செயலுக்கு ஆதரவு கொடுப்போரும் தமிழகத்தில் ஒளிந்து மறைந்து விளையாடுவது பாட்டாளி மக்கள்கட்சித் தலைவர்கள் அறிந்ததே.

'பாட்டாளி மக்கள் கட்சியோ, அதன் சார்பில் கூட்டப்பட்ட தமிழர் வாழ்வுரிமை மாநாடோ இந்தியாவிலிருந்து தமிழகத்தைப் பிரிக்கவேண்டும் என்று தீர்மானம் போட்டதுண்டா?' என்று கேட்கிறார் முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் பிரிந்து வாழும் உரிமை கோருவதும், பிரிந்தே வாழ்வது என்பதும் ஒன்றுதான் கணவனுக்கும் மனைவிக்கும் மனம் கசந்துவிட்டால் பிரிந்து வாழ சட்டம் அனுமதிக்கிறது என்று உவமானம் கூறினார் பாட்டாளி மக்கள் கட்சிமாநாட்டில் பண்ருட்டியார்.

பாட்டாளி மக்கள் கட்சியோ, அதற்கு பக்கபலமாக இருக்கும் குறிப்பிட்ட ஒரு வகுப்பினரோ தமிழ்நாட்டை இந்தியாவிலிருந்து பிரித்து விடுவார்கள் என்று நாம் அஞ்சவில்லை. அது எளிதில் முடியக்கூடியது என்றால் பெரியார் தலைமையைப் பெற்றிருந்த தி.க.வே அதை சாதித்திருக்க முடியும். தி.க.வின் வாரிசாகத் தோன்றி அறிஞர் அண்ணா தலைமையைப் பெற்றிருந்த தி.மு.க.வாலும் அதுமுடிந்திருக்கக்கூடும். ஆனால், 'திராவிடஸ்தான்' கோரிக்கைக்குப் பின்னே பிறந்த பாகிஸ்தான் அமைந்து 45 ஆண்டுகள் ஆகிவிட்டன.

இந்த கால கட்டத்தில் தி.க.விலிருந்து தி.மு.க.வும் அதிலிருந்து அ.தி.மு.க.வும் பிரிந்து பிரிந்து நலிந்து போனதைத் தவிர, நாட்டுப் பிரிவினை என்பது கொஞ்சம் கூட சாத்தியப்படவில்லை.

இனியும் அதுசாத்தியமாகாது.

சோவியத் யூனியன் உருவாகி 75 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் அதன் குடியரசுகள் யூனியனிலிருந்து பிரிந்து போயின. யூனியன் அரசு அதிபர் வகுத்த புதிய திட்டத்தின்-சட்டத்தின் காரணமாகத்தான் பிரிந்துபோயின. சோவியத் யூனியன் அரசமைப்பிலேயே பிரிந்து வாழ உரிமைதரும் பிரிவும் இருந்தது

இந்திய அரசியலமைப்பில் மாநிலங்கள் பிரிந்து வாழ உரிமைதரும் விதி இல்லை. இனியும் அப்படி ஒரு விதி அரசமைப்பில் ஏறாது.

ஏனெனில், தமிழருக்கு இன்னமும் தேசபக்தியும் தேசிய ஒருமைப்பாட்டுணர்வும் இருக்கிறது. அது சாகாது; ராமதாசர்களால் அதைச் சாகடிக்க முடியாது முடியுமானால், பெரியார் ஈ.வே.ராவாலும் அண்ணாவாலும் முடிந்திருக்க வேண்டுமே!

அவர்கள் திராவிட சமுதாயத்தின் தலைவர்களாக இருந்தனர். அவர்களால் முடியாததா சாதித் தலைவர்களால் முடியப்போகிறது. ஈழத்துப் புலிப்படைத் தலைவர் பிரபாகரனை பாராட்டும் ராமதாசர் 'பாட்டாளி மக்கள் கட்சி பஞ்சாப் காலிஸ்தான் கட்சி போல வன்முறையில் நம்பிக்கையுடையது அல்ல, என்று சத்தியஞ் செய்துசொல்லி சட்டத்திலிருந்து தப்ப முயல்கிறார். பஞ்சாபியர் போல என்று சொன்னது ஈழத்துப் புலிகளைப் போல என்றும் நாளை வழக்கு வந்தால் நீதிமன்றத்தில் வாதாடலாந்தானே!

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஒருபக்கம் பிரிந்து வாழ தமிழகத்துக்கு உரிமை கேட்கிறார். அதே பேச்சில் மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் கோரி அதற்காக நீதிபதி சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளை அமுல் நடத்தவும் மத்திய அரசுக்கு மனுப்போடுகிறார். இதுவும் நாளை வழக்கு வந்தால், நாங்கள் பிரிவினையாளர் அல்ல, கூடுதல் அதிகாரங்கள் கோருவோர்; என்று வாதாடத்தான்!

பொதுவாக பாட்டாளி மக்கள் கட்சி மாநாடு தமிழருக்கோ வன்னியருக்கோ துளியளவும் நன்மை செய்யவில்லை.

பலாத்காரத்திற்கு நான் எதிரியே!

போல்ஷிவிஸம் என்பது என்ன என்பதைப்பற்றி எனக்கு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை அதைப்பற்றி படிக்கவும் இயலவில்லை. போகப்போக அது ருஷ்யாவுக்கேனும் நன்மை பயக்குமா என்பதையும் அறியேன்.

ஆனால், பலாத்காரத்தையும் கடவுள் மறுப்பையும் அது அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அது எனக்கு வெறுப்பை உண்டாக்குகிறது என்பதை மாத்திரம் அறிவேன்.

வெற்றிக்குபலாத்காரக்குறுக்கு வழியை நான் நம்புவதில்லை. என்மீது கவனஞ்செலுத்திவரும் போல்ஷிவிக் நண்பர்க ஒன்றை உணரவேண்டும்; சிறந்த கொள்கைகளை நான் போற்றுவதாயினும், அவற்றிடம் எவ்வளவு அனுதாபம் கொள்வதாயினும் சிறந்த லட்சியங்களை அடையக்கூடப் பலாத்காரத்தை உபயோகிப்பது என்பதற்கு நான் சிறிதும் இடம் தராத எதிரி என்பதை அவர்கள் உணரவேண்டும். ஆகையால் பலாத்கார எண்ணம் இருப்பவர்களும் நானும் ஒத்துப்போவது என்பதற்கே இடமில்லை.

(காந்தி நூல் தொகுப்பு—2 பக். 393—384)

(போல்ஷிவிக்—கம்யூனிஸ்டு)

செங்கோல்

சந்தா விவரம்

ஆயுள் சந்தா	ரூ. 300-00
ஆண்டுச் சந்தா	ரூ. 30-00
ஆறுமாதச்சந்தா	ரூ 15-0
மூன்றுமாதச்சந்தா	ரூ 7-50
தனிப்பிரதி	காசுகள் 75

'முரசொலி'யுமா இப்படி?

[ம பொ சி.]

தி.மு.க. நாளேடும் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் குடும்பத்திற்கே உரியதுமான 'முரசொலி'க்கு பெயரளவில் ஆசிரியராக இருக்கும் திரு. செல்வம் அவர்கள் சட்டப் பேரவை உரிமையை மீறும் வகையில் செய்தி ஒன்றைப் பிரசுரித்ததற்காக செப்டம்பர் 21ல் பேரவையில் கண்டிக்கப்பட்டிருக்கிறார்.

வழக்கமில்லாத வழக்கமாக பேரவையிலே குற்றவாளி நிற்கக்கூண்டு ஒன்று அமைத்து அதிலே திரு செல்வத்தை நிற்கவைத்து பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி முத்தையா அவர்கள் அவையின் அனுமதியோடு கண்டனம் செய்திருக்கிறார் இப்படி ஒரு விபரீத நிகழ்ச்சி பேரவையில் அல்லது முன்னாளிலிருந்து கலைக்கப்பட்ட மேலவையில் நடந்தது கிடையாது.

தமிழக அரசியல் வரலாற்றில் மோசமான ஆபாசமான இழிவான மரபுகளை ஒன்றன்பின் ஒன்றாக உருவாக்கி வருகிறது தி.மு.க. தனது மதிப்பு மாசுபடுவதில் தி.மு.க.வுக்கோ, அதன் தலைவர் கலைஞருக்கோ, முரசொலி ஆசிரியருக்கோ கவலையில்லாமல் இருக்கலாம் ஆனால் தமிழினத்தின் அருமை பெருமை களங்கப்படுவது குறித்து ஒழுக்கத்தில் நம்பிக்கையுடைய தமிழர்கள் கவலைப்படாமலிருக்க முடியாதுதானே!

இந்த விஷயத்தில் பேரவைத் தலைவரும், அவையின் முன்னவரும், ஆட்சியின் முதல்வரும் மிகுந்த பொறுமை காட்டி பண்பாட்டுடன் நடந்து கொண்டிருக்கின்றனர்.

கூண்டில் நின்ற செல்வத்தை மன்னிப்பு வாக்குமூலம் தரும்படி அவர்கள் வற்புறுத்தியிருக்கலாம். அப்படிக்கின்றி பேரவையின் ஒரு தீர்மானத்தை யொட்டி அவையின் தலைவர் கண்டன அறிக்கையைப் படித்துவிட்டு, இந்த விவகாரத்தை அத்துடன் முடித்துவிட்டிருக்கிறார். கண்டனம் செய்வது வேறு. முன்னொரு முறை 'ஆனந்த விகடன்' பேரவையின் உரிமையை மீறியதற்காக அதன் ஆசிரியருக்கு மூன்று மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது தன்மான இயக்கத்தவருக்கு நினைவிருக்கவேண்டும். ஆனால், அப்போதுகூட முதல்வர் பொறுப்பிலிருந்த மாண்புமிகு டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் இரண்டொரு நாள் சிறைத் தண்டனை அனுபவித்ததோடு 'ஆனந்த விகடன்' ஆசிரியரை விடுதலை செய்துவிட்டார். அந்த அளவில்கூட இன்றைய அதிமுக அரசு 'முரசொலி' செல்வத்திடம் கடுமை காட்டவில்லை என்பது பெருமைப்படக் கூடியதாகும்.

பேரவை உரிமையை மீறிசெய்தியை பிரசுரித்துவிட்டு அதை வெளிப்படையாக தம்பட்டம் அடித்து முன்பு பலமுறை குற்றம் செய்திருக்கிறது 'முரசொலி' கலைஞர்மு.கருணாநிதிஅவர்கள் இப்படிப்பட்ட தவறுகளால்-ஏன் குற்றங்களால் தனக்கும் தனது தி மு.க.வுக்கும் பெருமை சேர்வதாக நினைக்கிறாரோ என்னவோ? இப்போதுகூட முரசொலி செல்வம் தாமே சென்றிருக்க மாட்டார் பேரவை கூண்டிற்கு பேரவைத் தலைவரின் அழைப்பை ஏற்றுதான் சென்றார் என்பது உண்மைதான். ஆனால், இதிலே கூட திரு. செல்வம் காட்டிய நாகரிகத்தை முரசொலியை நடத்தும் தி.மு.க எதிரொலிக்கவில்லை.

'முரசொலி' செல்வம் சபாநாயகர் அழைப்பை ஏற்றுகூண்டிற்கு சென்று அதிலே நின்றவண்ணம் சபாநாயகரின் கண்டனத்தைக் கேட்டு அதற்கு அடையாள ரீதியில்கூட எதிர்ப்பு காட்டாமல் கண்டிலிருந்து இறங்கிவிட்டார். இல்லை, நீங்கள் போகலாம் என்று பேரவைத் தலைவர் சொன்ன பிறகுதான் செல்வம் கூண்டிலிருந்து இறங்கினார். அவரை இந்தஅளவேனும் நாகரிகமாக நடந்து கொள்ளச்செய்த தி மு.க வையும் அதன் தலைவரையும் பாராட்டலாம். ஆனால், அதே நேரத்தில் செல்வம் பேரவையையோ, அதன்பெருமைமிகு தலைவரையோ வெற்றி கொண்டதாகக் கற்பனை செய்து கொண்டு செயின் ஜார்ஜ் கோட்டைக்கு வெளியே கூடியிருந்த தி.மு.க. தோழர்கள் செல்வத்துக்கு வாழ்த்துக்கூறி, ஆரவரித்திருக்கின்றனர். பொதுவாக தமிழினத்தின் புகழ்மிக்க வரலாற்றுக்கேற்ப தி.மு.கவும் அதன் தலைவரும் அறிஞர் அண்ணா மறைந்த பின் நடந்துகொள்ளவில்லை என்பதை மிகுந்தவேதனையுடன் சொல்லவேண்டியிருக்கிறது

'கலைஞர் பிறந்தில்லையானால்' அவருடைய 'முரசொலி' ஆசிரியர் குற்றவாளி கூண்டில் நின்றிருக்கவோ, பேரவைத் தலைவர் தந்த கண்டன தீர்ப்பை ஏற்று கைகூப்பி வணங்கி திரும்ப ஏற்பட்டிருக்காதல்லவா? இனி இப்படியும் சொல்லிக் கொள்ளலாம் தி.மு.க தலைவர் தமிழினம் என்னென்ன அவல நிலைகளை காணப்போகிறதோ? வருங்கால வரலாற்று ஆசிரியர்கள் தி.மு.க.வையோ, அதன் தலைவரையோ புகழ்ந்து எழுதமாட்டார்கள், வேறு எப்படி எழுதுவார்கள் என்பதை காலம் காட்டும்!

ம பொ சி நிகழ்ச்சிகள்

26-9-92 சனி: கோவை—மாலை 5மணிக்குபேரூர் சாந்தலிங்க சுவாமிகள் மடத்தில் தவத்திரு இராமசாமி அடிகளார் விழா,

27-9-92 ஞாயிறு: திண்டுக்கல்—காந்தியன்ற இயக்க பொது மாநாடு.

28-9-92 திங்கள்: மதுரை—காலை 10மணிக்கு காந்தி மியூசியம் பொதுக்குழுக் கூட்டம்.

மாலை 6 மணிக்கு காந்தி மியூசிய மண்டபத்தில் பாரதி விழாவில் — 'பாரதியாரும் ஆகஸ்டு இயக்கப் பொன் விழாவும் பற்றிப் பேச்சு.

தந்தி . பெரியார்
தொலைபேசிஎண்கள: 33213
இல்லம்: 31922
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு & விற்பனை நிலையம்,
92. திருப்பரங்குன்றம் சாலை-மற்றும் கிளைகள்,
உரிமையாளர்: பே.தேவசகாயம்-மதுரை.

ஆசிரியர், வெளியிடுபவர் : டாக்டர் ம. பொ. சிவஞானம், 18 இருசப்ப கிராமணித்தெரு, திருவல்லிக்கேணி சென்னை—600005.

டுபவர் அச்சி இ.ஸ. கிருஷ்ணன் குரு அச்சகம் : 19, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி சென்னை—600005 போன் : 844371